# பத்திரிக்கைச் செய்தி

22.10.2020-ந் தேதி புகார்தாரர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை புதுக்கோட்டை அலுவலகத்தை அணுகி 3 பட்டா கோரி திரு.மணிகண்டன், கிராம நிர்வாக அதிகாரி, குடிமியான்மலை மலை, புதுக்கோட்டை மாவட்டம் என்பவரை தொடர்பு கொண்டபோது தனக்கு கையூட்டாக ரூ.11,000/- கொடுக்க வேண்டும் என வற்புறுத்துவதாகவும் அதனால் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் புகார் அளித்தார். இப்புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டு பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின்போது திரு.மணிகண்டன், கிராம நிர்வாக அதிகாரி, குடிமியான்மலை மலை, புதுக்கோட்டை மாவட்டம் புகார்தாரிடமிருந்து ரூ.11,000/- கையூட்டாக வாங்கும்போது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் கைது செய்யப்பட்டார்.